உம்மை அறியாத ஜனங்களுக்கு உம்மை அறிவியும்

Make Yourself Known to the Nations Who Know You Not

Album 21 Song 3

Song 3 உம்மை அறியாத ஜனங்களுக்கு

Psalm 79 – Lament over destruction of Jerusalem, defilement of temple, blood of saints, plea for God to make Himself known to the nations and deliver His people. Echoes 2 Kings 25 and foreshadows end-time tribulation.

உம்மை அறியாத ஜனங்களுக்கு உம்மை அறிவியும்
உம் நாமத்தைத் தொழுதுகொள்ளாத ராஜ்யங்களை ஆளும் - அப்பொழுது
தலைமுறை தலைமுறையாக உமது துதியை சொல்லி வருவோம்
உம் மேய்ச்சலின் ஆடுகளாகிய நாங்கள் உம்மை என்றைக்கும் புகழுவோம்

கட்டுண்டவனின் பெருமூச்சு உமக்கு முன்பாக வரட்டும்
கொலைக்கு நியமிக்கப்பட்டவர்களை நீரே காத்தருளும்

பரிசுத்தமில்லா ஜனங்கள் உமது ஆலயத்தைத் தீட்டுப்படுத்தினர்
நீர் அரசாண்ட எருசலேமை மண்மேடுகளாக்கினர்
உமது ஊழியக்காரரின் பிரேதங்களைப் பறவைகளுக்கு கொடுத்தனர்
பரிசுத்தவான்களின் மாம்சத்தை மிருகங்களுக்கு இரைத்தனர்

KJC-DNN

கட்டுண்டவனின் பெருமூச்சு உமக்கு முன்பாக வரட்டும்
கொலைக்கு நியமிக்கப்பட்டவர்களை நீரே காத்தருளும்

உம்மை அறியாத ஜனங்களுக்கு உம்மை அறிவியும்
உம் நாமத்தைத் தொழுதுகொள்ளாத ராஜ்யங்களை ஆளும் - அப்பொழுது
தலைமுறை தலைமுறையாக உமது துதியை சொல்லி வருவோம்
உம் மேய்ச்சலின் ஆடுகளாகிய நாங்கள் உம்மை என்றைக்கும் புகழுவோம்

கட்டுண்டவனின் பெருமூச்சு உமக்கு முன்பாக வரட்டும்
கொலைக்கு நியமிக்கப்பட்டவர்களை நீரே காத்தருளும்

எருசலேமைச் சுற்றிலும் நீதிமான்களை வெட்டினர்
அவர்களுடைய இரத்தத்தை தண்ணீரைப் போலச் சிந்தினர்
பரிசுத்தவான்களை அடக்கம் பண்ண யாருமே இல்லை
யாக்கோபைப் பட்சித்து அவன் குடியிருப்பைக் கெடுத்தனர்

கட்டுண்டவனின் பெருமூச்சு உமக்கு முன்பாக வரட்டும்
கொலைக்கு நியமிக்கப்பட்டவர்களை நீரே காத்தருளும்

உமது நாமத்தின் மகிமையால் எங்களுக்கு உதவும்.
உமது நாமத்தின் வல்லமையால் எங்களை நீர் விடுவியும்
சிந்துண்ட இரத்தத்தின் பழிவாங்குதலை நீர் செய்யும்
உம்மை நிந்தித்த நிந்தையை புற ஜனங்கள் மடியில் திருப்பும்

கட்டுண்டவனின் பெருமூச்சு உமக்கு முன்பாக வரட்டும்
கொலைக்கு நியமிக்கப்பட்டவர்களை நீரே காத்தருளும்

உம்மை அறியாத ஜனங்களுக்கு உம்மை அறிவியும்
உம் நாமத்தைத் தொழுதுகொள்ளாத ராஜ்யங்களை ஆளும் - அப்பொழுது
தலைமுறை தலைமுறையாக உமது துதியை சொல்லி வருவோம்
உம் மேய்ச்சலின் ஆடுகளாகிய நாங்கள் உம்மை என்றைக்கும் புகழுவோம்

புகழுவோம் புகழுவோம் என்றைக்கும் புகழுவோம்
புகழுவோம் புகழுவோம் தலைமுறை தலைமுறையாக புகழுவோம்

அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா

KJC-DNN

